உலக சுகாதார அமைப்பின் நிர்வாக குழு தலைவராக பொறுப்பேற்றுள்ள

மத்திய அமைச்சர் ஹர்ஷவர்தனுக்கு எடப்பாடி பழனிசாமி வாழ்த்து

சென்னை, மே.23

உலக சுகாதார அமைப்பின் நிர்வாக குழு தலைவராக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் டாக்டர் ஹர்ஷவர்தன் நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவருக்கு பாராட்டு தெரிவித்து முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி வாழ்த்துக் கடிதம் அனுப்பியுள்ளார்.

அதன் விவரம் வருமாறு:

உலக சுகாதார அமைப்பின் நிர்வாக குழு தலைவராக நீங்கள் பொறுப்பேற்பதற்கு எனது பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறேன். கடின உழைப்பு, திறமை மூலம் இவ்வளவு பெரிய உயர்ந்த பதவியை நம் நாட்டைச் சேர்ந்த ஒருவர் அடைந்திருப்பது, இந்தியாவுக்கு கிடைத்த பெருமையாகும்.

நீண்டகாலம் நீங்கள் ஆற்றிய தொழிலுக்கு தற்போது மிகச்சரியான அங்கீகாரம் கிடைத்துள்ளது. தமிழக மக்கள் மற்றும் தமிழக அரசின் சார்பில் உங்களை பாராட்டுவதோடு, உங்கள் பணி வெற்றிகரமாக அமையட்டும் என்று வாழ்த்துகிறேன்.

இவ்வாறு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

பொறுப்பேற்பு

உலக சுகாதார அமைப்பின் நிர்வாகக் குழுவில் 34 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன. இதன் தலைவராக இருந்த ஜப்பானைச் சேர்ந்த ஹிரோகி நகாடானி பதவி காலம் முடிவடைந்தது. புதிய தலைவரை தேர்வு செய்வதற்காக நடந்த ஆலோசனை கூட்டத்தில் 194 நாடுகள் ஆதரவுடன் மத்திய அமைச்சர் ஹர்ஷ்வர்தன் தேர்வு செய்யப்பட்டார். இதனையடுத்து காணொலி காட்சி மூலம் அவர் நேற்று பொறுப்பேற்றுக் கொண்டார்.

பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசுகையில், ''கொரோனா வைரஸ் தொற்று உலக அளவிலான பிரச்சினையாக இருக்கும் நேரத்தில் நான் இந்தப் பொறுப்பை ஏற்கிறேன். அடுத்த 20 ஆண்டுகளுக்கு பல்வேறு சுகாதாரச் சவால்கள் இருக்கும் என்பதை நாம் அனைவரும் புரிந்து கொண்டுள்ளோம். இந்த சுகாதார சவால்களை எதிர்கொள்ள அனைவரும் பொறுப்புகளை பகிர்ந்து கொள்ள வேண்டியுள்ளது'' என்றார்.

நிர்வாகக் குழு ஆண்டுக்கு 2 முறை கூடி, உலக சுகாதாரம் குறித்த முக்கிய முடிவுகளை எடுக்கும். உலக சுகாதார நிறுவனத்தின் செயல் திட்டங்களுக்கு இந்த குழு பரிந்துரை வழங்கும். அடுத்து வரும் 3 ஆண்டுகளுக்கு இந்தப் பதவியில் ஹர்ஷ்வர்தன் நீடிப்பார்.

அண்ணா தி.மு.க. ஒருங்கிணைப்பாளரும், துணை முதலமைச்சருமான ஓ. பன்னீர்செல்வத்தை, கழக தகவல் தொழில்நுட்பப் பிரிவு மண்டலச் செயலாளர்களாக நியமிக்கப்பட்டுள்ள, சென்னை மண்டலம் அஸ்பயர் கே. சுவாமிநாதன், வேலூர் மண்டலம் எம்.கோவை சத்யன், கோவை மண்டலம் சிங்கை ஜி. ராமச்சந்திரன், மதுரை மண்டலம் வி.வி.ஆர். ராஜ் சத்யன் ஆகியோர் நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

கொரோனாவுக்கு எதிராக எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க

ராயபுரத்தில் பொதுமக்களுக்கு ஓமியோபதி சத்து மாத்திரைகள்: அமைச்சர் ஜெயக்குமார் வழங்கினார்

திருவொற்றியூர், மே.23

சென்னை ராயபுரத்தில் உள்ள ராபின்சன் மைதானத்தில் கொரோனாவுக்கு எதிராக எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க பொதுமக்களுக்கு ஓமியோபதி வைட்டமின் மாத்திரைகளை அமைச்சர் டி.ஜெயக்குமார் வழங்கினார்.

அப்போது நிருபர்களிடம் அவர் கூறியதாவது:–

உலகம் முழுவதும் உள்ள மருத்துவ குழுவினர் கொரோனாவுக்கு மருந்து கண்டுபிடிக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். கொரோனாவுக்கு நிரந்தர தீர்வாக மருந்து கண்டுபிடிக்க வேண்டும்.

சித்தா மற்றும் ஓமியோபதி முறையில் உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க பல்வேறு மருந்துகள் கண்டுபிடிக்கபட்டுள்ளன. தற்போது ஓமியோபதி முறையில் ஆர்சனிக் ஆல்பம் 30 சி என்ற மாத்திரை கொரோனாவுக்கு எதிரான நோய் எதிர்ப்பு சக்தியை உடலில் உருவாக்குகிறது. இதனை பயன்படுத்த அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

தற்போது பொதுமக்களுக்கு இந்த ஆர்சனிக் ஆல்பம் 30 சி மாத்திரை வழங்கப்பட்டு வருகிறது. சென்னையில் ராயபுரம் மண்டலத்தில் அதிகளவில் கொரோனா தொற்று இருப்பதால், இங்கு முதன் முதலாக இந்த பணியை தொடங்குகிறோம். தமிழகம் முழுவதும் 20 லட்சம் மாத்திரைகள் வழங்கப்படுகின்றன.

மீனவ நலவாரியம் சார்பில் 4 லட்சத்து 91 ஆயிரம் பேருக்கு ஏற்கனவே ரூ.1000 கொடுக்கப்பட்டுள்ள நிலையில், 2ம் கட்டமாக மேலும் ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. மீனவர் குடும்பம் என கணக்கெடுக்காமல் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் தனித்தனியாக கணக்கெடுக்கப்பட்டு நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது என்றார்.

இதுகுறித்து ஓமியோபதி மருத்துவ கவுன்சில் தலைவர் டாக்டர் ஞானசம்பந்தம் கூறியதாவது:

மத்திய அமைச்சகம் ஆயூஷ் பரிந்துரை செய்துள்ள மருந்து இது. எந்த மாத்திரைகள் எடுத்துக்கொண்டாலும் இந்த மாத்திரையை உட்கொள்ளலாம். எல்லா வயதினருக்கும் ஏற்றது. தினசரி 4 மாத்திரைகளை வெறும் வயிற்றில் எடுத்து கொள்ள வேண்டும். இது நோய் தடுப்பு மருந்துதான்.

அனைத்து மண்டலங்களிலும் விரைவாக நோய் எதிர்ப்பு மாத்திரைகள் வினியோகம் செய்யப்படும். தற்போது ஒரு மாதத்திற்கு தேவையான மருந்துகள் கொடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு அவர் கூறினார்.

சென்னை மாநகராட்சி திருவொற்றியூர் மண்டலம் அம்பேத்கர் நகரில் கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு பணிகளை சிறப்பு அதிகாரி ஜெய.ராதாகிருஷ்ணன் ஆய்வு செய்து, பொதுமக்களிடம் சளி, இருமல் மற்றும் காய்ச்சல் அறிகுறிகள் உள்ளனவா என்று நேரடியாக கேட்டறிந்தார். மண்டல பொறுப்பு அலுவலர் சி.காமராஜ், மண்டல அலுவலர் எம்.பால் தங்கதுரை ஆகியோர் உடன் உள்ளனர்.

நெல்லுக்கு அரவை மானிய நிலுவை ரூ.2,609 கோடியை உடனே வழங்க வேண்டும்

மத்திய அரசுக்கு அமைச்சர் காமராஜ் கோரிக்கை

புதுடெல்லி, மே. 23–

மத்திய அரசு வழங்க வேண்டிய நெல்லுக்கான அரவை மானிய நிலுவை ரூ.2 ஆயிரத்து 609 கோடியை விரைவாக வழங்க வேண்டும் என்று மத்திய அமைச்சர் ராம்விலாஸ் பாஸ்வானிடம் தமிழக அமைச்சர் ஆர்.காமராஜ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

'ஒரே நாடு ஒரே ரேஷன்' திட்ட பணிகள் வரும் செப்டம்பரில் நிறைவடையும் என்றும் அவர் கூறினார்.

உணவுத்துறை நடவடிக்கைகள் குறித்து டெல்லியில் மத்திய உணவுத் துறை அமைச்சர் ராம்விலாஸ் பாஸ்வான் அனைத்து மாநில உணவுத் துறை அமைச்சா்களுடன் காணொலிக் காட்சி மூலம் ஆய்வு மேற்கொண்டார்.

இதில் தமிழகம் சார்பில் அமைச்சர் ஆர்.காமராஜ் பங்கேற்று, தமிழக உணவுத் துறை செயல்பாடுகள், மத்திய அரசிடம் இருந்து தமிழகத்துக்கு வரவேண்டிய நிதி குறித்து கோரிக்கை விடுத்தார்.

அப்போது அமைச்சர் காமராஜ் பேசியதாவது:–கொரோனா நோய்த் தொற்று காரணமாக, கடந்த ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான காலத்தில் அனைத்து குடும்ப அட்டைதாரா்களுக்கும் இலவசமாக பொருட்கள் வழங்கப்பட்டுள்ளது.

பிரதமரின் கரீப் கல்யாண் யோஜனா திட்டத்தின் கீழ் ஒரு நபருக்கு 5 கிலோ அரிசி வழங்கும் திட்டத்துக்காக 5 லட்சத்து 36 ஆயிரத்து 5 மெட்ரிக் டன் அரிசியை மத்திய அரசு ஒதுக்கியது. தமிழக அரசு அதில் 5 லட்சத்து ஆயிரத்து 659 மெட்ரிக் டன் அரிசியை ஏப்ரல் மாதத்தில் 96.3 சதவீதமும், மே மாதத்தில் 85 சதவீதம் அளவுக்கும் வழங்கியுள்ளது.

இந்நிலையில் தமிழக அரசு முன்னுரிமையற்ற குடும்ப அட்டைதாரர்களுக்கும் அந்த அரிசியை வழங்க முடிவெடுத்து, ஒரு லட்சத்து 98 ஆயிரத்து 813 மெட்ரிக் டன் அரிசியை கிலோ ரூ.22 என்ற விலையில் இந்திய உணவுக் கழகத்திடம் வாங்கியுள்ளது.

நெல்லுக்காக மத்திய அரசு வழங்க வேண்டிய அரவை மானிய நிலுவை ரூ.2 ஆயிரத்து 609 கோடியை விரைவாக வழங்க வேண்டும்.

வெளிமாநில தொழிலாளர்களுக்கும்...

தமிழகத்தில் வசிக்கும் குடும்ப அட்டைதாரர்களுக்கு மட்டுமின்றி, வெளிமாநில தொழிலாளர்களுக்கும் அரிசி, சமையல் எண்ணெய், பருப்பு உள்ளிட்டவை ரூ.56.50 கோடி மதிப்பில் வழங்கப்பட்டு வருகின்றன.

தமிழகத்தில் 4 லட்சத்து 782 பேர் வெளிமாநிலத் தொழிலாளர்களாக இருப்பதாக மாவட்ட கலெக்டர்கள் அடையாளம் கண்டுள்ளனர். அவர்களில் ஒரு லட்சத்து 32 ஆயிரத்து 42 பேர் 96 சிறப்பு ரெயில்கள் மூலமாக தங்களது சொந்த ஊர்களுக்குச் சென்றுள்ளனர்.

தமிழகத்தில் ஒரே நாடு ஒரே ரேஷன் கார்டு திட்டத்தை அமல்படுத்த மத்திய அரசுடன் ஒப்பந்தம் செய்துள்ளது. இந்த நிலையில் பயோ–மெட்ரிக் கருவிகளை கொள்முதல் செய்து, அதனை நியாய விலைக் கடைகளில் உள்ள விலைப்பட்டியல் கருவிகளுடன் இணைக்கும் பணிகள் இறுதி கட்டத்தை எட்டியுள்ளன. இந்த பணிகள் அனைத்தும் செப்டம்பர் மாதத்துக்குள் முடிந்துவிடும்.

இவ்வாறு அமைச்சர் காமராஜ் கூறினார்.

இந்தக் கூட்டத்தில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தயானந்த் கட்டாரியா, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நிர்வாக இயக்குனர் எம்.சுதாதேவி, உணவுப் பொருள் வழங்கல் துறை ஆணையா் சஜன்சிங் ஆர். சவான் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

திருவள்ளூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கத்தில், பள்ளி கல்வித்துறை சார்பாக திருத்தணி சுந்தரேச நகர் அரசு உயர் நிலைப் பள்ளி மாணவி வி.ஜி. அபிநயாவுக்கு கலெக்டர் மகேஸ்வரி ரவிக்குமார் ரூ. 50 ஆயிரத்திற்கான காசோலையை வழங்கினார். மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் வெற்றிச்செல்வி, முதன்மை கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர் திருவரசு ஆகியோர் உள்ளனர்.

தமிழகம் முழுவதும் 28 மாவட்ட நீதிபதிகள் இடமாற்றம்

சென்னை, மே.23

தமிழகம் முழுவதும் 28 மாவட்ட நீதிபதிகளை இடமாற்றம் செய்து ஐகோர்ட் உத்தரவிட்டுள்ளது.

இது குறித்து சென்னை ஐகோர்ட் தலைமை பதிவாளர் சி.குமரப்பன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

சென்னை குடும்பநல கோர்ட் முதன்மை நீதிபதி ஏ.கே.ஏ.ரஹ்மான், நாகை மாவட்ட நிரந்தர லோக் அதாலத் தலைவராகவும், சென்னையில் உள்ள எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் மீதான வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு கோர்ட் நீதிபதி டி.லிங்கேஸ்வரன், சென்னை 12வது சி.பி.ஐ. கோர்ட் நீதிபதியாகவும், விழுப்புரம் போக்சோ வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு கோர்ட் நீதிபதி ஜி.விஜயலட்சுமி, சென்னை மாவட்ட நிரந்தர லோக் அதாலத் தலைவராகவும், திருவள்ளூர் 4வது கூடுதல் செசன்சு கோர்ட் நீதிபதி இருசன் பூங்குழலி, திருவண்ணாமலை கூடுதல் செசன்சு கோர்ட் நீதிபதியாகவும், பூந்தமல்லி 2வது கூடுதல் செசன்சு கோர்ட் நீதிபதி ஜி.சாந்தி, விழுப்புரம் மகளிர் கோர்ட் நீதிபதியாகவும், புதுக்கோட்டை எஸ்.சி., எஸ்.டி., வன்கொடுமை வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு கோர்ட் நீதிபதி எம்.ராஜலட்சுமி, சென்னை மகளிர் கோர்ட் நீதிபதியாகவும், தஞ்சாவூர் 2வது கூடுதல் செசன்சு கோர்ட் நீதிபதி கே.ரவி, சென்னை எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் மீதான வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு கோர்ட் நீதிபதியாகவும், பூந்தமல்லி 3வது கூடுதல் செசன்சு கோர்ட் நீதிபதி ஜி.டி.அம்பிகா, செங்கல்பட்டு மகளிர் கோர்ட் நீதிபதியாகவும், திருவண்ணாமலை போக்சோ வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு கோர்ட் நீதிபதி ஜி.விஜயராணி, திருவள்ளூர் 4வது கூடுதல் செசன்சு கோர்ட் நீதிபதியாகவும் என மொத்தம் 28 மாவட்ட நீதிபதிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

AMOL
மருத்துவமனைகள்
இலவச ஆலோசனை
வாட்ஸ் ஆப் / வீடியோ கால் / தொலைபேசி
- வலி நிவாரணம்
- நரம்பியல் நிவாரணம்
- மூட்டு வலி நிவாரணம்
- பக்கவாதம் நிவாரணம்
- குழந்தை பராமரிப்பு
- பெண்களுக்கு ஏற்படும் பிரச்சனைகளுக்கான தீர்வுகள்

11 am to 1 Pm / 7 Pm to 9 Pm

நோயாளிகள் தங்கும் வசதி உள்ளது | 10,000 மேற்பட்டோர் இயல்பு வாழ்க்கைக்கு திரும்பினர் | 24 மணி நேரம் பிரத்தியேகப்படுத்தப்பட்ட பராமரிப்பு

முன்பதிவிற்கு
+91 90947 44422
Valasaravakkam & OMR | www.amol.co

சுவாதீனம் எடுத்த அறிவிப்பு (அசையா சொத்து) விதி 8–(1)

கீழே கையொப்பமிட்டுள்ள ஐஐஎப்எல் ஹோம் பைனான்ஸ் லிமிடெட்டின் (முன்னர் இந்தியா இன்போலைன் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்) (ஐஐஎச்எப்எல்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழும், மேற்சொன்ன சட்டத்தின் 13(12)வது பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழும், 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்க) விதிகள், 3வது விதிமுறையின் கீழும் கடன்தாரர்கள்/ உடன்கடன்தாரர்கள் ஆகியோருக்கு அனுப்பிய டிமாண்டு நோட்டீசில் குறிப்பிடப்பட்டுள்ளபடி செலுத்த வேண்டிய தொகையை மேற்சொன்ன நோட்டீஸ் கிடைத்த 60 நாட்களுக்குள் திரும்ப செலுத்துமாறு கேட்டுக் கொண்டிருந்தார். கடன்தாரர் மேற்சொன்ன தொகையை திரும்பச் செலுத்த தவறியதால் கடன்தாரர் மற்றும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் அறிவிக்கப்படுகிறது யாதெனில் கீழே கையொப்பமிட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியானவர், கீழ்க்குறிப்பிட்டுள்ள சொத்தை மேற்சொன்ன சட்டத்தின் 13(4) பிரிவின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படியும், மேற்சொன்ன 8வது விதிமுறைக்கு இணங்கவும் சுவாதீனம் எடுத்துக் கொண்டார். கடன்தாரருக்கு குறிப்பாகவும், பொதுமக்களுக்கு பொதுவாகவும் எச்சரிக்கப்படுவது யாதெனில், சுவாதீனம் எடுத்துக் கொண்ட இந்த சொத்து ஐஐஎச்எப்எல்–க்கு திரும்ப செலுத்த வேண்டிய தொகை மற்றும் வட்டிக்கும் பிணையமாக உள்ளது என்பதால், யாரும் மேற்படி சொத்து தொடர்பாக எந்தவித வில்லங்கமும் மற்றும் தொடர்புகளையும் வைத்துக் கொள்ளக் கூடாது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. சட்டப்பிரிவு 13, துணைப்பிரிவு 8ன்படி கடன்தாரர்களின் கவனத்திற்கு கொண்டு வரப்படுவது யாதெனில், ''ஐஐஎச்எப்எல்''–க்கு செலுத்த வேண்டிய பாக்கித்தொகை, அனைத்து செலவுகள், கட்டணங்கள் மற்றும் ஏற்பட்ட செலவுகள் ஆகியவற்றை கடன்தாரர் விற்பனை அல்லது மாற்ற நிர்ணயிக்கப்பட்ட தேதிக்கு முன்னதாக எப்போது கட்டினாலும் ஈடு பெற்ற ஆஸ்திகள் ஐஐஎச்எப்எல்–ஆல் விற்பனை செய்யப்படாது அல்லது மாற்றப்படாது மற்றும் ஈடுபெற்ற ஆஸ்திகளை விற்க அல்லது மாற்றும் நடவடிக்கைகளை ஐஐஎச்எப்எல் மேற்கொள்ளாது.

கடன்தாரர்(கள்) பெயர் சென்னை கிளை	ஈடுபெற்ற ஆஸ்திகள் விவரம் (அசையா சொத்து)	செலுத்த வேண்டிய பாக்கித்தொகை (ரூ.)	டிமாண்ட் நோட்டீஸ் தேதி	சுவாதீன அறிவிப்பு தேதி
1. திருமதி. மலர்கொடி S 2. திரு. சண்முகம் R 3. வினாயகா செராமிக்ஸ் (புராஸ்பெக்ட் எண். 769180)	தமிழ்நாடு, திருவள்ளூர், மதுரவாயல் தாலுக்கா, நூம்பல் கிராமம், ராஜீவ் நகர், பென்டாஸ்டிக் பை அர்பன் ட்ரீ, டாலிப் பிளாக், முதல் மாடி, D107ல் உள்ள பிளாட் மற்றும் சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும்.	ரூ.38,40,250/–	10.01.2020	18.05.2020
1. ராமச்சந்திரன் T 2. சுமதி R (புராஸ்பெக்ட் எண். 753937)	தமிழ்நாடு, சென்னை, அத்திப்பட்டு, வானகரம் சாலை, அம்பத்தூர், டிஎன்எச்பி எல்ஜி பிளாட்ஸ், பிளாக் எண்.9, 14வது மாடி, எண்.9/1956ல் உள்ள பிளாட் மற்றும் சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும்.	ரூ.15,49,446/–	19.10.2019	18.05.2020
1. திரு. அயூப் நவ்ஷாத் N, 2. திருமதி. நிஷா நவ்ஷாத் 3. திரு. நவ்ஷாத் B (புராஸ்பெக்ட் எண்.741121)	தமிழ்நாடு 600 115, சென்னை, விழிஞ்சியம்பாக்கம் கிராமம், சேக்காடு சாலை, ''விஜினன் ராயல்'', ஏ பிளாக், முதல் மாடி, எண்.A–147ல் உள்ள பிளாட் பில்டப் ஏரியா 645 சதுர அடி மற்றும் 246 சதுர அடியை உள்ளடக்கி உள்ளது. மேலும் சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும்.	ரூ.18,43,407/–	18.12.2019	18.05.2020
1. திரு. கார்த்திக் எம் 2. திருமதி. இந்திர குமாரி (புராஸ்பெக்ட் எண். 818847)	திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி தாலுக்கா, கூடம் பாக்கம் கிராமம், விஜய ராஜா'ஸ் ஐடியல் ஹோம்ஸ், பிளாக் – E, 2வது மாடி, பிளாட் எண்.E207–ல் உள்ள சொத்து மற்றும் சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும்.	ரூ.19,66,498/–	15.11.2019	18.05.2020
1. திரு. லட்சுமண சுப்புலட்சுமி பிரபாகரன் 2. திருமதி. மீனா லட்சுமண (புராஸ்பெக்ட் எண்.IL10004973)	தமிழ்நாடு, சென்னை, திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி தாலுக்கா, கூடம்பாக்கம் கிராமம், பிளாட் எண்.சி312, ''விஜய் ராஜு'ஸ் ஐடியல் ஹோம்ஸ்', விஸ்தீரணம் 785 சதுர அடி மற்றும் சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும்.	ரூ.13,90,186/–	18.02.2020	18.05.2020

மேற்கொண்டு விவரங்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, கிளை அலுவலகம்:– 9வது மாடி, பாஸ்கான் பியூச்சரா டவர்ஸ், எண்.10/2, வெங்கட்நாராயணா சாலை, தி. நகர், சென்னை – 600 017 /அல்லது கார்ப்பரேட் அலுவலகம்: மனை எண். 98, பேஸ்–IV, உத்யோக் விஹார், குர்கான், ஹரியானா அவர்களை அணுகலாம்

இடம் : திருவள்ளூர் & சென்னை
தேதி : 23.05.2020

ஒப்பம்/–அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,
ஐஐஎப்எல் ஹோம் பைனான்ஸ் (ஐஐஎப்எல் எச்எப்எல்) லிமிடெட்டிற்காக

அறிவிப்பு

எனது கட்சிக்காரர் திரு. M. மோகன், த.பெ. மணி, வசிக்குமிடம், கதவு எண். 42/60, வேலாத்தம்மன் கோயில் தெரு, கன்னிகாபுரம், சின்னகாஞ்சிபுரம், காஞ்சிபுரம் வட்டம் மற்றும் மாவட்டம் என்பவருக்காக அளிக்கும் அறிவிப்பு யாதெனில், எனது கட்சிக்காரர் கடந்த 05-03-2012 அன்று தனது தகப்பனார் மணி என்பவரிடமிருந்து எழுதிப்பெற்ற செட்டில்மெண்ட் பத்திரமானது காஞ்சிபுரம் 4 நீ சார் பதிவகத்தில் பத்திர எண். 1080/2012 ன் படி பதிவு செய்யப்பட்டதும், காஞ்சிபுரம் வட்டம் மற்றும் நகரம், தாட்டித் தோப்பு கிராம சர்வே எண். 5/6, கணேஷ் நகர் மனைப்பிரிவில், மனை எண். 12, விஸ்தீரணம் 570 சதுரடி கொண்ட காலிமனைக்குண்டான மேற்படி அசல் செட்டில்மெண்ட் பத்திர எண். 1080/2012 கொண்டதை எடுத்துக்கொண்டு கடந்த 20-05-2020 அன்று காலை 11 மணியளவில், நகல் எடுப்பதற்காக காஞ்சிபுரம் காந்திரோடு, தேரடி அருகில் உள்ள ஜெராக்ஸ் கடையில் நகல் எடுத்து திரும்பும்போது, மேற்படி அசல் பத்திரம் கைப்பையுடன் காணாமல் போய்விட்டது. மேற்படி அசல் ஆவணத்தை யாரேனும் கண்டெடுத்தால், அதனை என்னிடமோ அல்லது எனது கட்சிக்காரர் வசமோ ஒப்படைக்கவேண்டியது. மேலும் யாரும் பத்திரத்தை கொண்டு வில்லங்கம் ஏற்படுத்த நினைத்தால் அது எனது கட்சிக்காரரை எந்தவிதத்திலும் கட்டுப்படுத்தாது என்பதை அறியவும்.

S.குமரவேல் B.A.L.L.B,
அட்வகேட்,
தாலுக்கா ஆபிஸ் காம்பவுண்ட், காஞ்சிபுரம் –2

பொது அறிவிப்பு

என்னுடைய கட்சிக்காரராகிய சென்னை – 600 001, சௌகார் பேட்டை, பள்ளியப்பன் சந்து, புதிய எண்.9, பழைய எண்.1/8ல் வசிப்பவரான S.ரஞ்சித்மல் சோர்டியா அவர்களால் மாதவரம் தாலுக்கா புழல் கிராமம், சர்வே எண்.137/2A, 137/1Aல் அடங்கிய Chandaaprabhu Vegetarian Villages (R) Part–I மனைப் பிரிவில் மனை எண்.82ல் அடங்கிய 3720 சதுரடி காலிமனையை ரெட்ஹில்ஸ் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவாகியுள்ள ஆவண எண்.3536/1995ன்படி கிரையம் பெற்று ஆண்டனுபவித்து வருகிறார். எனது கட்சிக்காரர் மேற்படி அசல் ஆவணத்தை தவற விட்டுவிட்டார். எனவே மேற்படி அசல் பத்திரம் யாருக்கேனும் கிடைக்கப்பெற்றால் இந்த அறிவிப்பு வெளியான ஏழு நாட்களுக்குள் எனக்கு எழுத்து மூலமாக தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

M.M.குமரவேலு,
வழக்கறிஞர்,
8/71A, தெற்கு சிவன் கோயில் தெரு,
வடபழனி, சென்னை–600 026.

EIH அசோசியேட்டட் ஹோட்டல்ஸ் லிமிடெட்

தி ஒபராய் குழும உறுப்பினர்

பதிவு அலுவலகம்: 1/24, ஜி.எஸ்.டி ரோடு, மீனம்பாக்கம், சென்னை–600027.
தொலைபேசி: 91-44-2234 4747; Fax: 91-44-2234 6699
வெப்சைட்: www.eihassociatedhotels.in
CIN: L92490TN1983PLC009903

தபால் ஓட்டு அறிவிப்பு

இதன் மூலம் அறிவிக்கப்படுவதாவது:

ஏ) கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 110 மற்றும் கம்பெனிகள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள் 2014, விதி 22ன்படி (ஏதாவது சட்ட மாற்றங்கள், திருத்தங்கள் மற்றும் மறுசட்டங்கள் உள்பட) EIH அசோசியேட்டட் ஹோட்டல்ஸ் லிமிடெட்டின் (''கம்பெனி'') உறுப்பினர்களுக்கு தெரிவிக்கப்படுவது யாதெனில், தபால் ஓட்டு படிவம் (''படிவம்''), விளக்க அறிக்கை (''அறிக்கை'') மற்றும் தபால் ஓட்டு அறிவிப்பு ஆகியவற்றை டெபாசிட்டரிகள் அல்லது கம்பெனியில் இமெயில் முகவரிகளை பதிவு செய்த உறுப்பினர்களுக்கு நேஷனல் செக்யூரிடீஸ் டெபாசிட்டரி லிமிடெட் (''என்எஸ்டிஎல்'')டினால் இமெயில் மூலமும், கம்பெனி/டெபாசிட்டரிகளில் இமெயில் முகவரியை பதிவு செய்யாத உறுப்பினர்களுக்கு ஸ்டாம்ப் ஒட்டப்பட்ட சுயமுகவரியிட்ட பதிலுரையுடன் பதிவுத்தபால் மூலமும் அனுப்பி வைக்கும் பணியை கம்பெனி 22 மே 2020 அன்று முடித்துள்ளது. தபால் ஓட்டு அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள அலுவல்களுக்கு சாதாரண/ சிறப்பு தீர்மானங்கள் மூலமாக ஒப்புதலை பெறுவதற்காக அறிவிப்பு மற்றும் படிவங்கள் ஆகியவை உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

பி) செக்யூரிடீஸ் அண்ட் எக்சேஞ் போர்டு ஆப் இந்தியா (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015 (''பட்டியல் கட்டுப்பாடுகள்'') விதி 44ன் கீழ், கம்பெனியின் அனைத்து உறுப்பினர்களுக்கு தொலைதூர மின்னணு ஓட்டுப்பதிவு வசதிக்காக என்எஸ்டிஎல்–லின் சேவைகளுக்கு கம்பெனி ஏற்பாடு செய்துள்ளது. தொலைதூர மின்னணு ஓட்டுப்பதிவு உள்பட தபால் ஓட்டுப்பதிவு நேர்மையாகவும் வெளிப்படையான முறையிலும் நடைபெற திரு. அஜய் குமார் ஜெயின், பிராக்டிசிங் கம்பெனி செயலாளர் அவர்களை ஆராய்வாளராக கம்பெனி நியமனம் செய்துள்ளது.

சி) தபால் ஓட்டுப்பதிவு மற்றும் தொலைதூர மின்னணு ஓட்டுப்பதிவு 23 மே 2020 அன்று காலை 10.00 மணிக்கு தொடங்கி 21 ஜூன் 2020 அன்று மாலை 5.00 மணிக்கு முடிவடைகிறது. 21 ஜூன் 2020 அன்று மாலை 5.00 மணிக்கு பின்னர் தொலைதூர மின்னணு ஓட்டுப்பதிவினை என்எஸ்டிஎல் முடக்கிவிடும். முன்னதாகவே உறுப்பினர்கள் தங்களது வாக்கினை பதிவு செய்யுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். முறையாக பூர்த்தி செய்யப்பட்ட தபால் ஓட்டு படிவங்கள் 21 ஜூன் 2020 அன்று மாலை 5.00 மணிக்குள் ஆராய்வாளரை வந்து சேரும்படி அனுப்ப வேண்டும். 21 ஜூன் 2020 அன்று மாலை 5.00 மணிக்கு பின்னர் பெறப்படும் தபால் ஓட்டு படிவங்கள் செல்லாததாக கருதப்படும். ஆராய்வாளரால் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படாது. முழுமையாக பூர்த்தி செய்யாத, கையொப்பமிடாத, சிதைந்த மற்றும் முறையாக குறிப்பிடாத தபால் ஓட்டு நிராகரிக்கப்படும். தபால் ஓட்டுப்பதிவு அல்லது மின்னணு ஓட்டுப்பதிவு ஆகியவற்றில் ஏதேனும் ஒரு முறையில் மட்டுமே உறுப்பினர் வாக்களிக்க வேண்டும் ஒருவேளை உறுப்பினர் தபால் ஓட்டுப்பதிவு மற்றும் மின்னணு ஓட்டுப்பதிவு இரண்டையும் செய்திருந்தால் அதில் தொலைதூர ஓட்டுப்பதிவு மட்டுமே செல்லத்தக்கதாக கருதப்படும்.

டி) தபால் ஓட்டு படிவத்தை பெறாத உறுப்பினர்கள் அதனை என்எஸ்டிஎல் இணையதளம் www.evoting.nsdl.com அல்லது கம்பெனியின் இணையதளம் www.eihassociatedhotels.inலிருந்து படியிறக்கம் செய்து கொள்ளலாம் அல்லது மாற்று தபால் ஓட்டு படிவத்தை பெற கம்பெனிக்கு விண்ணப்பிக்கலாம்.

இ) குறைகளை தீர்க்க அணுக வேண்டிய பொறுப்பான நபர் பற்றிய விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

(i) ஓட்டுச்சீட்டு மூலம் ஓட்டுப்பதிவு:
திரு. தேஜஸ்வி தீட்சித்/திரு. அஜித் குமார் ஜா,
இன்வெஸ்டார்ஸ் சர்வீசஸ் டிவிஷன் (ஐஎஸ்டி),
EIH லிமிடெட்,
7, ஷாம் நாத் மார்க், டெல்லி–110 054.
இமெயில்: tejasvi.dixit@oberoigroup.com
ajit.jha@oberoigroup.com
isdho@oberoigroup.com
போன்: 91-11-2389 0505

(ii) மின்னணு வாக்குப்பதிவு:
திரு. அமீத் விஷால்
நேஷனல் செக்யூரிடீஸ் டெபாசிட்டரி லிமிடெட் (NSDL)
டிரேட் வேர்ல்ட் – A விங், கமலா மில்ஸ் காம்பவுண்ட்
லோயர் பரேல், மும்பை–400 013
இமெயில்: amitv@nsdl.co.in
போன்: 91-22-2499 4360

எப்) தபால் ஓட்டு/தொலைதூர மின்னணு ஓட்டுப்பதிவு முடிவுகள் 22 ஜூன் 2020 அன்று மாலை 5.00 மணிக்கு கம்பெனியின் பதிவு அலுவலகம், 1/24, ஜி.எஸ்.டி ரோடு, மீனம்பாக்கம், சென்னை–600027ல் அறிவிக்கப்படும். முடிவுகள் மற்றும் ஆராய்வாளர் அறிக்கை ஆகியவை கம்பெனியின் பதிவு அலுவலக அறிவிப்பு பலகையில் மற்றும் கம்பெனியின் இணையதளம் www.eihassociatedotels.inல் வைக்கப்படும் மற்றும் ஸ்டாக் எக்சேஞ்களுக்கு தெரிவிக்கப்படும்.

EIH அசோசியேட்டட் ஹோட்டல்ஸ் லிமிடெட்டுக்காக

இடம்: கொல்கத்தா
தேதி : 23 மே, 2020

ஒப்பம்/– இந்த்ராணி ரே
கம்பெனி செயலாளர்